# உதயம்

கி. வா. ஜகந்நாதன்
தொகுத்தது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை-4

# உதயம்

கி. வா. ஜகந்நாதன்
தொகுத்தது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை-4

உரிமை பதிவு] 1947 [அணா 6

## அன்பர்களுக்கு

எங்கள் சொந்த அச்சுக் கூடத்திலிருந்து வெளியாகும் முதல் நூல் "உதயம்." அன்பர்களின் பேராதரவு, வழக்கம்போல், எங்களுக்குக் கிடைத்து வருமென நம்புகிறோம்.

பாரதியாரின் "பாரத மாதா திருப்பள்ளியெழுச்சியை" இதில் சேர்த்துக் கொள்ள அனுமதியளித்த பாரதிப் பிரசுராலயத்தாருக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

## உள்ளுறை


1. சிவபெருமான் திருப்பள்ளியெழுச்சி
2. திருமால் திருப்பள்ளியெழுச்சி
3. முருகன் திருப்பள்ளியெழுச்சி
4. அருட்பெருஞ்சோதி திருப்பள்ளியெழுச்சி
5. பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி
6. திருவெம்பாவை
7. திருப்பாவை

உ

# உ த ய ம்

## சிவபெருமான் திருப்பள்ளியெழுச்சி

[மாணிக்கவாசகர் அருளியது]

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்

திரணிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லாற்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுவவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

## திருமால் திருப்பள்ளியெழுச்சி

[தொண்டரடிப்பொடியாழ்வார் அருளியது]

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
　　கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்
　　வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
　　இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
　　அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்
　　கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
　　ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற குதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
　　வெள்ளயி றுறஅதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
　　அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 2

சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்
　　துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
　　பாயிருள் அகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
　　வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
　　அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 3

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே
மாமுனி வேள்வியைக் காத்தவ பிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம் அரசே
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 4

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே. 5

இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ?
இறையவர் பதினொரு விடையரும் இவரோ?
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ?
மருத்தரும் வசுக்களும் வந்துவந் தீண்டி
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்
அருவரை அனையநின் கோயில்முன் இவரோ?
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 6

அந்தரத் தமரர்கள் கூட்டங்கள் இவையோ?
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ?
இந்திரன் ஆனையும் தானும்வந் திவனோ?
எம்பெரு மான்உன கோயிலின் வாசல்

சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்
அந்தரம் பாரிடம் இல்லைமற் றிதுவோ?
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா
எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு
ஏற்பன ஆயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ?
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தினின் றகல்கின்ற இருள்போய்
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 8

ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தரு வரவர் கங்குலுள் எல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்
ஆதலில் அவர்க்குநா ளோலக்கம் அருள
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. 9

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்
அடியனை அளியனென் றருளிஉன் அடியார்க்கு
ஆட்படுத் தாய்! பள்ளி எழுந்தரு ளாயே. 10

# முருகன் திருப்பள்ளியெழுச்சி

[திருப்போரூர், சிதம்பரசுவாமிகள் அருளியது]

திருமலி குணதிசை அருணன்நல் உதயம்
செய்தனன் இருவினைச் சமமல பாகப்
பருவம துடையவர் தமதுளம் எனவே
பாரகம் விளங்கின அவர்குணக் கிரிமேல்
அருளொளி வீசிநின் றிலகுமுன் பதம்போல்
அருக்கனும் குணதிசைப் பொருப்பெழு கின்றான்
இருளறு குறுமுனி பரவிய போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 1

ஆடுற மணிமயில் சிறைவிரித் ததன்மேல்
அருளொளி திகழநீ எழுந்தருள் முறைபோல்
பீடுறு மரகதக் குரகதம் பூண்ட
பெருந்தடந் தேர்மிசை எழுந்தனன் கதிரோன்
வாடுறு தாமரை நினதருள் அடைந்த
மாதவர் முகமென மலர்ந்தன எங்கும்
ஏடவிழ் மலர்ப்பொழில் பொதுளிய போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 2

பகரரு சுடர்விடும் உனதயில் கண்ட
பதகர்தம் மனமெனச் சுரர்மனம் எனவே
புகருடு மழுங்கின விகசிதம் ஆகிப்
பொலிந்தன முளரிகள் தடந்தொறும் உனது
திகழ்பதம் அடைந்தவர் உயிர்ச்சிறு போதம்
தேய்ந்தென மதியொளி தேய்ந்தது குணபால்
இகலறு கதிரெழு கின்றது போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 3

என்றனைக் கைப்பிடித் தாளுறும் இறைவன்
எழில்பெறு மலர்விழி மலர்ந்தெழு சமயம்
உன்றன துளவிருள் போக்குவன் நோக்கால்
ஒல்லையில் வருகென எல்லினைக் கூவி
நின்றன திருங்கொடி அழைத்துறு முறைபோல்
நீடுறு மனைதொறும் கூவின மிகவும்
இன்றெனை ஆண்டுகொண் டருளிய போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 4

மன்மதன் விருதுகள் ஊதின பொழில்வாய்
மாயவன் கரப்படை தொனித்ததுன் எதிரே
தென்மலி மலரவன் ஊர்திகள் தடத்துச்
சிலம்பின நின்கொடி பதவெச்ச ரிக்கை
பன்முறை பண்ணுவ போல்மனை தோறும்
பாழியங் குரலொலி காட்டின அருளால்
என்மல இருள்தெறும் ஆரிய போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 5

கின்னரர் கிம்புரு டர்களொடு கெருடர்
கெந்தரு வர்கள்சித்தர் வித்தியா தரரும்
மன்னிய முரசதிர் சிகரியின் வாய்தல்
வந்தனர் ஐந்தெழில் வாத்தியம் தொனித்தார்
பொன்னில மடவார் இந்நில மடவார்
புரிந்தனர் நாடகம் இருந்தகை மயில்போல்
இன்னருள் பொழிமுகி லேதிருப் போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 6

வானவர் புகழ்நவ வீரர்கள் ஒருபால்
மால்வரை யனகண நாதர்கள் ஒருபால்
தீனமில் எண்டிசைப் பாலகர் ஒருபால்
தேவர்கள் முனிவர்கள் பாதலர் ஒருபால்

தானமதுதவிய கரங்கொடு பாரி
சாதநன் மலர்மழை பொழிந்தனர் பணிந்தே
ஏனலம் புனமலி சாரலம் போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 7

மறைமுடி உணர்ந்தவர் மறையவர் அடியார்
வருபரி சாலகர் அரசர்கள் வணிகர்
குறைவறு வளவர்கள் மற்றுளர் எவரும்
குழுமியே வடமொழி தென்மொழிப் பாவால்
நிறைதய வுடனினைப் புகழ்ந்துநின் றேத்தி
நீளுறு தண்டெனப் பணிந்தெழு கின்றார்
எரிமணி அருவிகள் சொரிகிரிப் போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 8

விலையறு நவமணி மாலைகள் கொணர்ந்தார்
வெயில்விடு குலிசகே யூரங்கள் கொணர்ந்தார்
அலகறு மணிசெறி மகுடங்கள் கொணர்ந்தார்
ஆழிம தாணிகள் நூபுரம் கொணர்ந்தார்
நிலைபெறு கவரிதழ் நேத்திரங் கொணர்ந்தார்
நிறைந்துளம் வேண்டிய பெறவுறப் பணிந்தார்
எலையறு பெருவரம் அருள்செயப் போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 9

ஐங்கரம் கொடுதழு வுறநினை ஒருகொம்
பானையுள் மகிழ்ந்தது முக்கணம் பொருப்புன்
பங்கய முகவணி கண்டுகண் களிப்பப்
பரிவொடு நினைந்தது பனிவரை உயிர்த்த
செங்கயல் விழிப்பசும் பிடிநினை மடிமேல்
சேர்த்தருட் பால்தரத் திருவுளத் துனுமீண்
டெங்களை ஆண்டுகொண் டருளிய போரூர்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 10

# அருட்பெருஞ்சோதி திருப்பள்ளியெழுச்சி

[அருட்பிரகாச வள்ளலார் அருளியது]

பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாம்
சொல்லுதல் வேண்டுமென் வல்லசற் குருவே
முழுதுமா ஞானன ஆகம வேத
முறைகளெல் லாமொழி கின்றமுன் னவனே
எழுதுதற் கரியசீர் அருட்பெருஞ் சோதி
என்தந்தை யேபள்ளி எழுந்தரு ளாயே. 1

துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானம்
தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை உதயம்செய் ததுமா
சித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த
நற்குண சன்மார்க்க சங்கத்தார் எல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்
எற்குண அளித்தவென் அருட்பெருஞ் சோதி
என்னம்மை யேபள்ளி எழுந்தரு ளாயே. 2

நிலந்தெளிந் ததுகணம் மழுங்கின சுவணம்
நீடொளி தோன்றிற்றுக் கோடொலிக் கின்ற
அலர்ந்தது தாமரை ஆணவ இருள்போய்
அழிந்தது கழிந்தது மாயைமால் இரவு
புலர்ந்தது தொண்டரோ டண்டரும் கூடிப்
போற்றியோ சிவசிவ போற்றியென் கின்றார்
இலங்குரு அளித்தவென் அருட்பெருஞ் சோதி
என்குரு வேபள்ளி எழுந்தரு ளாயே. 3

கல்லாய மனங்களும் கரையப்பொன் ஞெளிதான்
கண்டது கங்குலும் விண்டது தொண்டர்
பல்லாரும் எய்தினர் பாடிநின் ருடிப்
பரவுகின் ருரன்பு விரவுகின் ருராய்
நல்லார்மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாம்செய் வல்லவென் அருட்பெருஞ் சோதி
என்தெய்வ மேபள்ளி எழுந்தரு ளாயே. 4

புன்மாலை இரவெலாம் புலர்ந்தது ஞானப்
பொருப்பின்மேற் பொற்கதிர் புலர்ந்தது புலவோர்
சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்ருர்
சுத்தசன் மார்க்கசங் கத்தவர் எல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்ருர்
வானவர் நெருங்கினர் வாழியென் கின்ருர்
என்மாலை அணிந்தஎன் அருட்பெருஞ் சோதி
என்பதி யேபள்ளி எழுந்தரு ளாயே. 5

ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்தசன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையும் எளிமையும் ஆகியன் ருகி
அம்பலத் தேசித்தி ஆடல்செய் பதியே
இருமையும் அளித்தஎன் அருட்பெருஞ் சோதி
என்னர சேபள்ளி எழுந்தரு ளாயே. 6

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்
சிவசிவ போற்றியென் றுவகைகொள் கின்ருர்
நினைப்பள்ளி உண்ணத்தெள் ளாரமு தளிக்கும்
நேரமிந் நேரமென் ருரியர் புகன்ருர்

முனைப்பள்ளி பயிற்றுதென் றனைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்துடற் பழுதெலாம் தவிர்த்தே
எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ் சோதி
என்னப்ப னேபள்ளி எழுந்தரு ளாயே. 7

மதம்பிடித் தவரெலாம் வாய்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவரெலாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவரெலாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் சோதி
என்னைய னேபள்ளி எழுந்தரு ளாயே. 8

மருளொடும் மாயைபோய்த் தொலைந்தறு மதங்கள்
வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்
அருளொளி விளங்கிய தொருதிருச் சபையும்
அலங்கரிக் கின்றனர் துலங்கிவீற் றிருக்கத்
தெருளொடும் பொருளும்மேல் மேலெனக் களித்துச்
சித்தெலாம் செய்திடத் திருவருள் புரிந்தே
இருளறுத் தெனையாண்ட அருட்பெரும் சோதி
என்வள்ள லேபள்ளி எழுந்தரு ளாயே. 9

அலங்கரி க்கின்றோமோர் திருச்சபை யதிலே
அமர்ந்தருட் சோதிகொண் டடிச்சிறி யோமை
வலம்பெறும் இறவாத வாழ்வில்வைத் திடவே
வாழ்த்துகின் றோம்முன்னர் வணங்கிநிற் கின்றோம்
விலங்கிய திருளெலாம் விடிந்தது பொழுது
விரைந்தெமக் கருளுதல் வேண்டுமித் தருணம்
இலங்குநற் றருணம்எம் அருட்பெரும் சோதி
என்தந்தை யேபள்ளி எழுந்தரு ளாயே. 10

# பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி

[சி. சுப்பிரமணிய பாரதியார் பாடியது]

பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்
விழுதுயில் கின்றனை இன்னுமெம் தாயே!
வியப்பிது காண் பள்ளி எழுந்தருளாயே. 1

புள்ளினம் ஆர்த்தன ஆர்த்தன முரசம்
பொங்கிய தெங்கும் சுதந்தர நாதம்
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்
வீதியெ லாமணு குற்றனர் மாதர்
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்
அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை
ஆருயி ரேபள்ளி எழுந்தரு ளாயே. 2

பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்
பார்மிசை நின்னொளி காணுதற்கு அலந்தோம்
கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்
சுருதிகள் பயந்தனை சாத்திரங் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை அம்மே
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய்
நிர்மலை யேபள்ளி எழுந்தரு ளாயே. 3

நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ?
பொன்னனை யாய்வெண் பனிமுடி இமயப்
பொருப்பினன் ஈந்த பெருந்தவப் பொருளே
என்ன தவங்கள்செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே
இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ?
இன்னுயி ரேபள்ளி எழுந்தரு ளாயே. 4

மதலையர் எழுப்பவும் தாய்துயில் வாயோ?
மாநிலம் பெற்றவள் இஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமக ளேபெரும் பாரதர்க் கரசே
விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதும் காணாய்
இதமுற வந்தெமை ஆண்டருள் செய்வாய்
ஈன்றவ ளேபள்ளி எழுந்தரு ளாயே. 5

# திருவெம்பாவை

[மாணிக்கவாசகர் அருளியது]

## சத்தியை வியந்தது

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான் [போய்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர் [தோ
புத்தடியோம்புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லா
எத்தோநின் னன்புடைமை எல்லோ மறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாய். 3

ஒள்ளித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையும் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதி
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால் [யோ
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து [வோம்
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளை யாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும் [பணியாள்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்த
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி [கர்தாள்
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப் [வாய்.
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பா

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

# திருப்பாவை

[சூடிக்கொடுத்த நாச்சியார் அருளியது]

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெ லூடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய் 3

ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்

ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குற் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்

எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க [கொள்
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மாநீ
நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலிஉன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்
செப்பம் உடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்றம் உடையாய் பெரியாய் உலகினில்

தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டுங்கொண் டெங்கள்மேல்நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாஉன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

அன்றிவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி இருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று காணம்சேர்ந் துண்போம்
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்துஉன் தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா உன்தன்னோடு

உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவாநீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்தநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல்பட்டர்பிரான்கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் எம்பாவாய். 30

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர், நெ. 109, ஜனவரி, 1947

## எங்கள் அரிய வெளியீடுகளிற் சில

| | |
|---|---|
| திருப்புகழ் விருத்தியுரை | சிசுபாலனம் - ராஜாஜி |
| அம்பலவாணன் | தாவரங்களின் இல்லறம் |
| அமூல்யன் - சரத் சந்திரர் | கதைக் கோவை - தொ. 1 |
| அனுபமா ,, | கதைக் கோவை ,, 2 |
| விஜயா ,, | கதைக் கோவை ,, 3 |
| தேவதாஸ் ,, | கதைக் கோவை ,, 4 |
| ஸௌதாமினி ,, | கதைக் கோவை ,, 5 |
| சந்திரநாத் ,, | உணவும் சுக வாழ்வும் |
| இந்துமதி ,, | தலைவர் ஜவாஹர் - தி. ஜ. ர |
| ஆனந்த மடம் - பங்கிம் | சந்திரிகா - குகப்ரியை |
| விஷ விருக்ஷம் ,, | ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் |
| மாதங்கினி ,, | குழலோசை - ஸரோஜா |
| துர்க்கேசநந்தினி ,, | குழந்தை மனம் - ஸேனு |
| தேவி சௌதுராணி ,, | கற்புக் கனல் - ஆதித்தர் |
| ராஜஸிம்ஹன் ,, | கரட்டூர் ராமு - சீதாராம் |
| இந்திரா - ,, | காந்தி காட்டும் பாதை |
| அழகி - சிறுகதைகள் | நீலமணி - கி. வா. ஜ. |
| சக்ரவாகம் ,, | மல்லிகை மாலை - ,, |
| சந்தனக் காவடி ,, | வழி காட்டி - ,, |
| பவழ மாலை - ,, | புயல் - மகாகவி டாகூர் |
| வெண் தாமரை ,, | இளமைப் பருவம் - ,, |
| ஆரியமத உபாக்யானம் | கல்வின் வேட்கை - ,, |
| ஆண்டாள் - பி. ஸ்ரீ. | சதுரங்கம் - ,, |
| ஔவையார் - ,, | கன்றுங் கனியுதவும் |
| இருமலர்கள் - பிரேம் சந்த் | ராஜராஜ சோழன் |
| ஸம்பத்து - எஸ். வி. வி | சோழன் கரிகாலன் |
| உல்லாஸ வேளை - ,, | அனுமான் - ராமதூதன் |
| வஸந்தன் ,, | இராமாயண ஸாரம் |
| புதுமாட்டுப் பெண் ,, | பாகவத ஸாரம் |
| ராஜாமணி ,, | பாரத ஸாரம் |
| ஸௌந்தரம்மாள் ,, | தாய்ப் பால் |
| வாழ்க்கையே வாழ்க்கை | ஷண்முகசுந்தரம் |
| இரு துருவங்கள் | சிவகுமாரன் |
| எரி நட்சத்திரம் | மோகனாங்கி |
| என் சரிதம் - காந்திஜீ | முரளீதரன் |

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4**